## தலவாக்களை – லிந்துல நகர சபை

## நுவரஎலிய மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 பெப்ரவரி 20 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 06 திகதி நகர சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, தலவாக்களை-லிந்துலை நகர சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

1.3.1 பெற வேண்டிய கணக்குகள்

---------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகள் 02 இன் கூட்டுத்தொகை ரூபா 50,595,587 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,153,494 ஆகும்.

1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் 03 இன் கூட்டுத்தொகை ரூபா 60,801,927 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18,182,556 ஆகும்.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------

(அ) தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 116,092 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 08 செயற்திட்டங்கள் தொடர்பாக மத்திய அரசின் பல்வேறு அமைச்சுக்களில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த 01 முதல் 13 ஆண்டு வரையான கால வீச்சை சேர்ந்த ரூபா 1,064,602 தொகை தொடர்ந்தும் கிடைக்கக் கூடும் என்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படவில்லை.

1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.6 ஆம் பிரிவு | சபையில் கடமையாற்றி இறந்துள்ள மற்றும் விபரங்கள் பெற்றுக்கொள்ளமுடியாத 08 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 212,233 இற்கான பதவியணிக் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாண இலக்கம் 571 | வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை கடந்துள்ள ரூபா 574,254 பெறுமதியான வைப்புத் தொகை தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் உரிமையளிப்பு செய்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,466,729 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,085,826 ஆக காணப்பட்டமையால் மிகையில் ரூபா 2,619,097 இற்கான குறைவு ஒன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---

மீளாய்வாண்டிற்கான மிகையினை முன்னைய ஆண்டின் மிகையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 2,619,097 இற்கான குறைவு ஒன்று காணப்பட்டது. அதற்காக 2014 ஆண்டின் போது 03 வருமான விடயங்களில் வருமானம் நூற்றிற்கு 01 முதல் நூற்றிற்கு 55 வரையான வீச்சில் குறைதலும், 04 செலவு விடயங்களில் நூற்றிற்கு 16 முதல் நூற்றிற்கு 235 வரையான வீச்சில் அதிகரிப்பும் காரணமாக அமைந்துள்ளது.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு,

| வருமான விடயம் | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | 2014.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவையில் இருந்து அறவீடுகள் | 2014 ஆண்டின் போது பில் போடப் பட்டவைகள் | ஆண்டின் போது பில் போடப் பட்டவைகளின் அறவீடுகள் | 2014.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவையில் இருந்து | ஆண்டிற்கான பில் போடப் பட்டவைகளில் இருந்து | மொத்த நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 3,866,081 | 2,616,662 | 6,912,939 | 4,138,297 | 1,249,419 | 2,774,641 | 2,774,642 |
| கடை வாடகை | 462,003 | 13,893 | 2,801,070 | 2,606,697 | 448,110 | 194,372 | 642,482 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | - | - | 1,598,700 | 1,598,700 | - | - | - |
| ஏனையவைகள் | 77,623 | 47,486 | 1,469,359 | 1,368,454 | 30,137 | 100,904 | 138,541 |

2.3.2 வீதவரி

-----------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 2,774,642 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்காக நகரசபை கட்டளை சட்டத்தின் பிரிவு 170 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

-------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 351,500 இற்கான முத்திரை கட்டணம் பெற வேண்டியுள்ளது.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

--------------------------------------

வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்கியமையை உறுதிப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த பௌதீக மற்றும் நிதி செயலாற்றுகையை காட்டும் முன்னேற்ற அறிக்கையின் மூலம் செயலாற்றுகைகளை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

3.2 முறை சாரா கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------

நகர சபைக்குச் சொந்தமான இலக்கம் CPPB – 8670 கொண்ட மைக்ரோ இன கப் வண்டி ரூபா 324,846 தொகை செலவிடப்பட்டு திருத்த வேலைகள் மேற் கொண்டிருந்த போதும், இயந்திர பொறியியலாளரின் விதப்புரையை பெற்றிருக்கவில்லை.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு பௌதீக வளங்கள்

------------------------------------------------------------------------------------------------------

(அ) 2006 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 131,450 பெறுமதியான குப்பைகளை துண்டுகளாக்கும் அக்ரிடெக் மல்டி சொப்பர் இயந்திரம் 07 வருடங்களை மிகைத்து இருந்த போதும் 2014 திசெம்பர் 31 திகதி வரை பயன்படுத்தப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) 2014 மார்ச் 07 ஆந் திகதி சபைத் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 390,000 பெறுமதியான நீர் பவுஸர் ஒன்று கொள்வனவு செய்தற்காக 2014 ஜுன் 24 திகதி ரூபா 100,000 ஒன்றின் சபை செலுத்தியிருந்தது. குறிப்பிட்ட பயன்பாடு ஒன்று இன்றி அவ்வாறான நீர் பவுஸர் ஒன்றும் நகர சபையில் காணப்படும் போது முறையாக கேள்வி நடைமுறையை கடைபிடிக்காமை மேலும் நீர் பவுஸர் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு 08 மாதங்களை விட மிகையான காலம் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர சபையனால் பல வழிகளில் பெற்றுக் கொள்ளும் நிதியங்களில் இருந்து நிர்மாணிக்கப்பட்டுவரும் மூன்று மாடி சேவா பியஸ கட்டடத்திற்காக 2014 செப்டம்பர் 24 ஆம் திகதி வரை ரூபா 8,368,886 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. 2012 ஜனவரி 05 திகதிய இலக்கம் 01/2012 கொண்ட அரச நிதிச் சுற்று நிருப ஏற்பாடுகளுக்கு மாற்றமாக 04 கட்டங்களில் அப் பிரதேசத்தில் உள்ள சங்கங்கள் மூலம் தொழில்நுட்ப அலுவலர்களின் மதிப்பீட்டுத் தொகையை மிகைத்து நிர்மாணிக்கப்பட்டுவரும் இக் கட்டடத்திற்காக முறையான வரைபு மற்றும் மதிப்பீடு ஒன்று தயாரித்திருக்கவில்லை. அத்துடன் பரிசோதனை திகதி வரை இக் கட்டடத்தில் பொருத்தப்பட்டுள்ள துணைக் கருவிகள் முறையான நியமங்களில் காணப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) குறைந்த வருமானத்தை பெறும் உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி வேலைகளுக்காக மத்திய மாகாண சபையினால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் இருந்து ரூபா 1,885,376 தொகை ஒன்று செலவிடப்பட்டு மிடில்டன் உல்லாசப் பிரயாணிகள் இளைப்பாறும் சாலைக்காக பயன்படுத்தப்பட்டிருந்த துணைக்கருவிகள் மற்றும் பொருத்துக்கள் உரிய நியமத்தில் காணப்படவில்லை. இவ் விடயங்களை கணக்காய்வினால் சுட்டிக்காட்டிய பின்னர் உயர்தர நியமங்களை கொண்டு துணை கருவியை பொருத்தும்படி ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

3.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 07 வருமான விடயங்களில் நூற்றிற்கு 05 முதல் நூற்றிற்கு 213 வரையும், 06 செலவு விடயங்களில் நூற்றிற்கு 18 முதல் நூற்றிற்கு 246 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தறு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) கடன் பட்டோர் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) சொத்துக்கள் நிருவாகம்